புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | மார்ச் 16, 2023 | புரட்சி 22 | முழக்கம் 09 | விலை: ரூ.3.00

# மீண்டும் கருவறைத் தீண்டாமையை நிலைநாட்டியது, மதுரை உயர்நீதிமன்றம்

# வடநாட்டில் இல்லாத ஆகமம் தமிழ்நாட்டுக்கு ஏன்?

## ஆர்ப்பாட்டத்தில் விடுதலை இராசேந்திரன் உரை

***ஆகமங்களைத் தடை செய்யக் கோரி – இனி ஆகம எரிப்புப் போராட்டத்தை நடத்த வேண்டிய நிலை வந்துவிட்டது என்று கூறிய தி.வி.க. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஆகம விதிகள் பார்ப்பனர்களால் மீறப்பட்டதைப் பட்டியலிட்டுக் காட்டினார்.***

*வயலூர் முருகன் கோயில் அறநிலையத் துறையால் நியமிக்கப்பட்ட இரண்டு பார்ப்பனரல்லாத அர்ச்சகர் நியமனத்தை செல்லாது என்று அறிவித்து விட்டது மதுரை உயர்நீதிமன்றக் கிளை. ஏற்கனவே 10 ஆண்டுகளாக எவ்வித வேத ஆகம தகுதித் தேர்வுகள் இல்லாமல் குல வழி அர்ச்சகர்களாக இருக்கும் இரண்டு பார்ப்பன அர்ச்சகர்கள் தொடர்ந்த வழக்கு, இந்த இருவரும் முறைப்படி அறநிலையத் துறை நியமனம் பெறாவிட்டாலும் அந்தக் கோயிலின் காமிகா ஆகமப்படி ஆதி சிவாச்சாரியார், ஆதி சைவர் குலத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்குத் தான் அர்ச்சகர் தகுதி உண்டு என்று நீதிபதி ஜீ.ஆர். சாமிநாதன் தனது தீர்ப்பில் கூறியிருக்கிறார். அறநிலையத் துறை நியமித்த மூன்றாவது அர்ச்சகர் பார்ப்பனர் என்பதால் அவரை எதிர்த்து வழக்கு இல்லை.*

*அரசியல் சட்டத்தைவிட அதிக அதிகாரம் படைத்தது ‘ஆகம விதிகள்’ என்று பார்ப்பனர்கள் அதைத் தங்கள் ஆதிக்கத்துக்கான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகம விதிகளில் அப்படி ஜாதி, குலம் பற்றிய குறிப்புகள் இருக்கிறதா என்ற கேள்விக்கு தமிழ் ஆகமங்களில் அப்படி இல்லை என்று ஆகமப் பண்டிதர்கள் கூறுகிறார்கள். அதற்காக ‘பழக்க வழக்கப்படி’ (Custom and usages) என்ற சட்டத்தில் இடம் பெற்ற சொல்லை ஆகமத்தோடு இணைத்துக் கொண்டு பார்ப்பன ரல்லாத மக்கள் மீது கருவறைத் தீண்டாமையைத் திணித்துக் கொண்டிருக்கிறது பார்ப்பனக் கூட்டம். நீதிமன்றங்கள் இதற்குத் துணை போகின்றன.*

*சரி; ஆகமவிதிகள் இதுவரை மீறப்பட்டதே இல்லையா? காலத்துக்கேற்ப அதற்கு எதிராக சட்டங்கள் கொண்டு வரப்படவில்லையா?*

- *1947இல் தான் இந்து கோயில்களுக்குள் அனைத்து இந்துக்களும் உள்ளே சென்று வழிபடும் சட்டம் வந்தது. கோயிலுக்குள் அனைவரும் போகலாம்; கோயில் குளத்தில் அனைவரும் குளிக்கலாம் என்ற அந்தச் சட்டமே ஆகமத்துக்கு எதிரானதுதான். அதற்கு முன்பு பார்ப்பனரல்லாதவர்களுக்கு வீதியில் நின்று கோபுர தரிசனம் செய்யவே அனுமதித்தார்கள். ‘கோபுர தரிசனம் கோடி புண்ணியம்’ என்று அதற்குப் புனிதம் கற்பித்தார்கள்.*
- *ஆகமப்படி கோயில்களில் இறுதி பூஜையாக ‘நிருத்தியம் உபச்சாரம்’ என்ற பூஜை நடக்கும். இதை கோயில்களில் தேவதாசிகள் செய்ய வேண்டும்; பிறகு கடும் எதிர்ப்பு வலுத்த பிறகு கோயில்களில் ‘தேவதாசி’ தடைச் சட்டத்தை அரசே கொண்டு வந்தது. இது ஆகமத்தை மீறிக் கொண்டு வரப்பட்ட சட்டம்.*
- *வைணவத்தில் புரட்சி செய்த இராமானுஜர் திருவரங்கம் கோயிலில் நடந்து வந்த வைகாசன ஆகம பூஜை முறைகளை நிறுத்தினார். அதற்குப் பதிலாக ‘பஞ்ச ராத்திர பூஜை’ முறையை அறிமுகம் செய்தார். அப்படி கோயிலின் ஆகமமே மாற்றப்பட்டிருக்கிறது; பழக்க வழக்கமும் தான்!*
- *திருவரங்கம் ரங்கநாதனிடம் அன்பு காட்டிய துலுக்க நாச்சியார் என்ற இஸ்லாமியப் பெண்ணை கோயிலுக்குள் அழைத்து வழிபாடு செய்யும் முறையை அறிமுகப்படுத்தினார் இராமானுஜர். இப்போதும் பகவான் ரெங்கநாதன், துலுக்க நாச்சியார் வீட்டுக்குப் போகும் சடங்கு திருவரங்கம் கோயிலில் நடக்கிறது. அதே இராமானுஜர் வழி வந்த தென்கலைப் பார்ப்பனர்கள்தான் இப்போது ஆகமங்களை, பழக்க வழக்கங்களை மாற்றக் கூடாது என்று நீதிமன்றம் ஓடுகிறார்கள்.*
- *சென்னை தியாகராயர் நகரில் சிவா- விஷ்ணு ஆலயம் ஒன்று உள்ளது. கவிஞர் கண்ணதாசன் முயற்சியால் கட்டப்பட்ட கோயில். சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஒரே கோயில் கட்டக் கூடாது; அது ஆகமத்துக்கு எதிரானது.*
- *ஆகமங்கள் எப்படி வந்தன? எத்தனை ஆகமங்கள் இருக்கின்றன? சைவ ஆகமங்கள் 28. அதிலிருந்து பிரிந்த ஆகமங்கள் 207. பல தமிழ் வடிவ ஆகமங்கள் அழிக்கப்பட்டு விட்டன. தற்போது தமிழ்நாட்டில் இருப்பது காமிகம், காரணம் மகுடம், வாதுளம், சுப்ரபேதம் என்பவை தான். இவற்றுள் காமிகம், காரணம் இரண்டுமே பெருமளவில் பின்பற்றப்படுகிறது.*

*(2ஆம் பக்கம்)*

# அர்ச்சகர் சட்டம்: மதுரை நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டம்



*ஸ்ரீரங்கம் குமார வயலூர் கோவிலில் அனைத்து சாதி அர்ச்சகர் சட்டத்தின்படி மூன்று அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டனர். அதில் ஒருவர் பார்ப்பனர். ஏனைய இரண்டு பார்ப்பனரல்லாத அர்ச்சகர்களின் நியமனம் செல்லாது என்றும், இதற்கு முன்பு பணியில் இருந்த பார்ப்பனர்களுக்கே அர்ச்சகர் பணி கொடுக்கப்பட வேண்டும் என்றும், மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி சுவாமிநாதன் அளித்த தீர்ப்பைக் கண்டித்தும், தமிழ்நாடு அரசு இவ்விவகாரத்தில் உடனே தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும், மார்ச் 9, 2023 மாலை 4 மணியளவில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையிலும் மாவட்ட செயலாளர் இரா. உமாபதி முன்னிலையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*ஆர்ப்பாட்டத்தின் தொடக்கமாக கோரிக்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. தொடர்ந்து, காஞ்சிபுரம் ரவிபாரதி உரையாற்றினார். பின், தோழர் நாத்திகன், இரண்யா, ப்ரீத்தி ஆகியோர் ‘தூங்குறியா நடிக்கிறியா ரங்கநாதா?’ பாடல்களைப் பாடினர்.*

*அனைத்து சாதியினர் அர்ச்சகர் பயிற்சி மாணவர் சங்க ஒருங்கிணைப்பாளர் ரங்கநாதன், பணி ஆனை வழங்கப்பட்டதில் இருந்து அர்ச்சகர் மாணவர்களுக்கு பார்ப்பன அர்ச்சகர்களால் ஏற்பட்ட அவமதிப்புகளைப் பகிர்ந்து கொண்டார்.*

*மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய சென்னை மாவட்ட செயலாளர் ஜி.செல்வா, மக்கள் உரிமை பாதுகாப்பு மையம் மருதையன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு ஆகியோர் உரையாற்றினர்.*

*இறுதியாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். அவர் , ஆகம விதிகள் என்று கூறி தான், பார்ப்பனர்கள் அனைத்து ஜாதியினர் அர்ச்சகர் ஆவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இனியும் தொடர்ந்தால் ஆகம எரிப்புப் போராட்டத்தை நாங்கள் முன்னெடுப்போம்’ என்று போராட்ட அறிவிப்புடன் உரையை நிறைவு செய்தார்.*

*ஆர்ப்பாட்டத்தில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் வேழவேந்தன் உட்பட சென்னை பகுதிக் கழகத் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.*

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 16.03.2023**

# திராவிட இயக்கத்தின் இன்றைய திசை வழி

## விடுதலை இராசேந்திரன்

***‘முரசொலி’ – முதல்வர் மு.க. ஸ்டாலின் 70ஆவது பிறந்த நாள் சிறப்பு மலருக்கு எழுதிய கட்டுரை.***

1916இல் சென்னை மாகாணத்தில் திராவிடர் இயக்கம் முன்வைத்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற சமத்துவக் கோட்பாடு இன்று 100 ஆண்டுகள் கடந்து புதிய பரிணாமங்களைப் பெற்று வளர்ந்து வருகிறது. அன்றைக்கு பார்ப்பனப் பிடியில் சிக்கியிருந்த காங்கிரஸ் கட்சி, தமிழ்நாட்டில் மட்டும் திராவிட இயக்கத்தின் தாக்கத்தால் தன்னைத் தகவமைத்துக் கொண்டு, ராஜாஜி காலத்துக்குப் பிறகு சமூக நீதிக் குரலை ஒலித்து, திராவிட இயக்கப் பாதையில் நடைபோடும் சூழல் உருவானது. சனாதன தர்மத்தை என்றுமே மாற்ற முடியாது என்று வர்ணாஸ்ரமத்தை உயர்த்திப் பிடித்த சக்திகள், பல்வேறு தடைகள் எதிர்ப்புகளைக் கடந்தும் உருத்திரட்சிப் பெற்று, இப்போது ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டது. இதன் விளைவாக திராவிடம் - சனாதனம் என்ற முரண்பாடுகள் கூர்மையடைந்து நிற்கின்றன.

புதிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய வரலாற்றுச் சூழலை உருவாக்கியுள்ளது. திராவிட இயக்கம் கடும் சவால்களை ஆதிக்க - அதிகார சக்திகளிடமிருந்து சந்திக்கும் நெருக்கடியான காலகட்டத்தில் அதை எதிர்கொள்வதற்கும் புதிய திசையில் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார் நமது முதல்வர். அதற்குப் பல உதாரணங்களைப் பட்டியலிட முடியும்.

முதல்வர் பதவி என்பது சுழலும் நாற்காலிகளில் அமர்ந்து கொண்டு அதிகாரிகளுக்கு ஆணைகளைப் பிறப்பிப்பது தான் என்ற மரபுகளைத் தகர்த்துள்ளார். நேரடியாகக் களத்தில் இறங்கி, மக்களைச் சந்திப்பது



தான் மக்களுக்கான இன்றைய நவீன ஜனநாயகம் என்ற முடிவுக்கு வந்தார். அரசுக் கட்டமைப்புகளைத் தாண்டி மக்களுடன் வளர்த்துக் கொண்ட நேரடி உறவுகள் - தொடர்புகள் - அவர்களின் கோரிக்கை மனுக்களை நேரடியாகப் பெறுதல் என்று களமிறங்கினார். உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் வழியாக இலட்சக் கணக்கான மக்களின் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. அடுத்து அறிவிக்கப்பட்ட அரசின் திட்டங்கள் செயலாக்கப்படுகிறதா என்பதை நேரிலே மாவட்டம் தோறும் சென்று அதிகாரிகளிடம் கள ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் எந்த முதல்வரும் கற்பனையில் கூட சிந்திக்காத செயல் திட்டங்கள் இவை.

பள்ளிக் கல்வியைப் பாதியில் நிறுத்தியவர்களை மீண்டும் பள்ளிகளுக்குக் கொண்டு வர பள்ளிக் கல்விக்கு வெளியே தன்னார்வத் தொண்டர்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வை ஊட்டி வருவதும், கல்லூரி, பொறியியல் பயிலும் மாணவர்களின் திறன் மேம்பாட்டை வளர்த்தெடுக்க கல்லூரிகளுக்கு வெளியே உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கும் நான் முதல்வன் திட்டமும் இப்படிப் பட்டது தான். இல்லம் தேடி மருத்துவமும் இதே பட்டியலில் தான் வருகிறது. கட்டமைப்புகளுக்கு வெளியே நிகழ்த்தப்படும் புதிய நிர்வாக அணுகுமுறை.

முரண்பாடுகளைக் கையாளுவதிலும் முதலமைச்சரின் அணுகுமுறை புதிய திசைவழியில் பயணிக்கிறது என்று கூற முடியும். ஆளுநர் திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படைக் கொள்கைகளைக் கடுமையாக விமர்சித்து தனது அதிகார வரம்பை மீறியபோது அதை உறுதியோடு எதிர்த்தார். அதே வேளையில் ஆளுநர் பதவி என்று ஒன்று இருக்கும் வரை அதற்கேற்ற மரியாதை வழங்கப்பட வேண்டும் என்ற தெளிவான எல்லைக்கோட்டை வகுத்து செயல்படுகிறார். குடியரசுத் தலைவரிடம் உரிய முறையில் தமிழ்நாடு அரசின் எதிர்ப்பைப் பதிவு செய்து, ஆளுநரின் அத்துமீறல்களுக்குக் கடிவாளம் போட்ட முதல்வர், ஆளுநரிடம் ஏற்பட்ட சில மாற்றங்களுக்குப் பிறகு அவர் நடத்திய தேநீரில் விருந்தில் பங்கேற்றார். முதல்வரின் அணுகுமுறையில் பின்பற்றும் நேர்மைக்குச் சான்றாக நிற்கிறது.

கட்சி அரசியலை அணுகும் முறையிலும் புதிய திசை வழியை உருவாக்கியுள்ளார் நம் முதல்வர். எம்ஜிஆர்., ஜெயலலிதா முதல்வர்களாக இருந்த காலத்தில் திமுக எதிர்ப்பு தான் தமிழ்நாட்டின் முதன்மையான அரசியலாக அவர்கள் முன் வைத்தார்கள். எதிர்ப்பு அரசியல் என்ற போர்வைக்குள் மக்கள் பிரச்சினைகளை மூடி மறைத்து திசை திருப்பி வந்தார்கள். அதைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளார் தமிழக முதல்வர். எதிர்க்கட்சி எதிர்ப்பு என்பதற்காக மக்கள் ஆட்சியில் அமர்த்தவில்லை. மக்கள் தங்களுக்கான திட்டங்களை வாழ்வுரிமைகளை நிறைவேற்றவே அதிகாரத்தில் அமர்த்தியிருக்கிறார்கள் என்பதை சரியாக உணர்ந்தார். கட்சி எதிர்ப்பு அரசியலைக் கடந்து போய்விட வேண்டும்; அதைவிட முன்னுரிமைப் பெற வேண்டியது மக்களும் தமிழ்நாட்டின் வளர்ச்சியும் தான் என்று தெளிவான பாதையில் பயணித்து வருகிறார்.

பெண்களின் முன்னேற்றத்தில் தான் சமுதாய வளர்ச்சி அடங்கியிருக்கிறது என்ற சுயமரியாதை இயக்கப் பார்வையில் செயல் திட்டங்களை அமல்படுத்துகிறார். பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம் தேவைதான் என்றாலும் அதைவிட முக்கியம் அவர்கள் உயர் கல்வியை எட்டிப் பிடிப்பது தான் என்ற சமூகப் புரிதலோடு அரசுப் பள்ளியில் படித்து கல்லூரியில் நுழையும் மாணவிகளுக்கு மாதம் ரூ. 1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தைக் கொண்டு வந்தார். இது புதிய திசை வழிப் பார்வை. பெண்களுக்குக் கட்டணமில்லாத பேருந்துப் பயணம் பெண்களின் சுதந்திரமான நடமாட்டத்தை உறுதி செய்தது; அவர்களை அதிகாரப்படுத்தியது. நீட் தேர்வு ரத்துக்கு சட்டப் போராட்டம், மருத்துவ உயர் பட்டப் படிப்பில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் இட ஒதுக்கீடு உரிமைக்கு சட்டப் போராட்டம் நடத்தி, அனைத்து மாநிலங்களுக்கும் அந்த உரிமைகளைப் பெற்று தந்தது. பள்ளி மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி என்று திராவிட இயக்கத்தின் இலட்சியங்களை புதிய திசையில் விரிவாக்கி வருகிறார்.

கடந்த கால ஆட்சிகளின் பொருளாதாரச் சீரழிவுக் கொள்கையால் கடும் நிதி நெருக்கடியில் சிக்கி மூச்சுத் திணறிய தமிழ்நாட்டை அதிலிருந்து மீட்டெடுக்கும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதும், புதிய தொழில் முதலீடுகளை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புகளையும், உற்பத்தியையும் மேம்படுத்தும் செயல்பாடுகளை முடுக்கி விடுவதும், திராவிடக் கொள்கைக் காலத்தின் தேவைக்கேற்ற திசைவழிப் பயணத்தை மேற்கொண்டு வருவதற்கு மேலும் உதாரணங்கள்.

திராவிட இயக்கத்தின் இலட்சிய வாரிசாக கடுமையாக உழைக்கும் முதல்வரின் செயல்பாடுகள், அவரை ஒரு ஆட்சித் தலைவர் என்ற எல்லையைத் தாண்டி மக்கள் தலைவராக உருமாற்றி வருகிறது. இயக்கத் தலைவர்களாக மட்டுமின்றி மக்கள் தலைவர்களாக உருமாற்றம் பெற்றவர்களே உலக வரலாற்றில் நிலைத்து நிற்கிறார்கள். இந்தியா என்பது ஒன்றியம் தான்; தமிழ்ப் பேசும் மாநிலம் - தமிழ்நாடு தான்; சமூகநீதி - சுயமரியாதை - கூட்டாட்சி - பெண்ணுரிமையே எங்களுக்கான அடையாளங்கள் என்ற உறுதியான பிரகடனத்தோடு சனாதனத்துக்கான எதிர்ப்புப் போராட்டத்தில் திராவிட மாடலை முன்வைத்து பயணித்து வருகிறது தமிழ்நாடு அரசு. முதல்வர் கட்சித் தலைவர் என்ற நிலையிலிருந்து மக்கள் தலைவராக மக்கள் இதயங்களில் சிம்மாசனம் போட்டு அமர்ந்துள்ளார்.

இந்த புதிய திசைவழிப் பயணத்தைப் பற்றிய புரிதல் நமக்கு வேண்டும்; இவற்றை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்; அதுவே நமது முதல்வருக்கு நாம் செலுத்தும் உண்மையான பிறந்தநாள் வாழ்த்தாக இருக்க முடியும். ●

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

- முதலில், தமிழில் இருந்த ஆகமங்களை பார்ப்பனர்கள் சமஸ்கிருதத்தில் மாற்றி தங்கள் வைதீகக் கருத்துகளையும் புகுத்தி விட்டார்கள் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.
- தமிழில் ஆகமங்கள் தனித்த மதக் கொள்கைக் கொண்டவை என்றும், வடமொழிக்கு மாற்றியவர்கள் வைதீகக் கருத்துகளைத் திணித்தார்கள் என்றும் சென்னை பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராக பணியாற்றிய சூரிய நாராயண சாஸ்திரி (பரிதிமாற்கலைஞர்) தனது ‘சிகண்டான் சிவாத்து வைதம்’ நூலில் பதிவு செய்துள்ளார். மறைமலையடிகளார் போன்றோரும் இதே கருத்துடையவர்கள்.
- தமிழிலிருந்து களவாடிய வடமொழி ஆகமம் காமிகா ஆகமத்தை மீண்டும் வடமொழியிலிருந்து தமிழ்மொழிக்கு மொழி பெயர்த்தவர் கோ. சண்முக சுந்தர முதலியார். 1899இல் வெளியிடப்பட்டது.
- வயலூர் முருகன் கோயிலில் காமிகா ஆகமம் பின்பற்றப்படுகிறது; அதை மீறக் கூடாது என்று மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிபதி ஜி.ஆர். சாமிநாதன் தீர்ப்பில் கூறியிருக்கிறார். அதே காமிகா ஆகமம் 109ஆவது படலத்தில் ‘ஸ்நான விதிப் படல’த்தில் ஒரு தீண்டாமை கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. புத்த மதத்தினரான சாக்கியர் மற்றும் பிற மதத்தினரிடம் உணவு பெற்று சாப்பிட்டால் அது தீண்டாமைக் குற்றம். உடனே தீட்டு கழிக்க குளிக்க வேண்டும். காமிகா ஆகமப்படி, இந்த விதியையும் மதுரை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறதா? சூரிய நாராயண சாஸ்திரியும் இதே கருத்தை உறுதி செய்கிறார். ஆகமம் ரிஷிகளால் உபதேசிக்கப் பட்டதாக கூறுகிறார்கள். ரிஷிகள் காலத்தில் புத்த மதமும் பிற மதங்களும் தோன்றி விட்டதா? இல்லை. இந்த மதங்கள் 3, 2ஆம் நூற்றாண்டில் வந்தவை. ஆகமத்தில் பார்ப்பனர்கள் இத்தகைய பார்ப்பனிய தீண்டாமையை இடையில் திணித்துள்ளார்கள் என்பதற்கு இது சான்று.
- ஆகமங்களை சிவபெருமான் ‘லெமூரியா கண்டத்தில் (தற்போதைய கன்யாகுமரிப் பகுதி) மகேந்திர மலையிலிருந்து ரிஷிகளுக்கு உபதேசித்தாகக் கூறுகிறார்கள். இந்த 5 ரிஷிகளில் பரத்துவாஜர் என்பவர் ஒருவர் மட்டுமே பார்ப்பனர். ஒடுக்கப்பட்ட பார்ப்பனரல்லாத மற்றவர்கள், கொல்லர், நாவிதர், வேடர் மரபுகளைச் சார்ந்தவர்கள். இவர்கள் தான் சிவபெருமான் கூறிய ஆகமத்தைப் பிறருக்கு பரப்பினார்கள் என்கிறார்கள். பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட ரிஷிகள் ஆகமங்களை மக்களிடம் கொண்டு செல்லும் உரிமைகளைப் பெற்றிருந்தார்கள் என்றால், அதே ஆகமங்கள் பார்ப்பனரல்லாதவர்களை கோயில்களில் புறக்கணிப்பது நியாயம் தானா?

ரிஷிகள் காலத்து ஆகமங்களை இப்போதும் பின்பற்ற வேண்டும் என்று கூறுகிற பார்ப்பனர்கள், நீதிமன்றங்கள் கோயிலில் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த மட்டுமே பயன்படுத்துகிறார்கள். மற்ற பிரச்சினைகளில் தங்கள் வசதிக்காக ஆகமங்களை சாஸ்திரங்களை மீறுகிறார்கள். பிராமணன், கடல் தாண்டக் கூடாது என்பது சாஸ்திரம். வட்ட மேஜை மாநாட்டில் பங்கேற்கச் சென்ற தீவிர பார்ப்பனியவாதி மாளவியா, இதற்குப் பரிகாரமாக கங்கை நீரையும் மண்ணையும் எடுத்துச் சென்று இலண்டனில் பூஜை செய்து தீட்டுக் கழித்து பரிகாரம் செய்தார். இந்துக் கடவுள்களையே வெளிநாடுகளுக்குக் கொண்டு போய் அமெரிக்காவிலும் அய்ரோப்பாவிலும் முஸ்லீம்கள் வாழும் மத்திய கிழக்கு நாடுகளிலும் கோயில்களைக் கட்டுகிறார்கள். அதற்கு பார்ப்பன அர்ச்சகர்கள் கடல் தாண்டி விமானத்தில் பறக்கிறார்கள். அந்த நாடுகளின் குடிமகன்களாகவே பதிவு செய்து கொள்கிறார்கள்.

கோயில்களில் மின் விளக்கு, கண்காணிப்பு கேமிரா, ஆன்லைன் தரிசன டிக்கட் என்றெல்லாம் வந்துவிட்டது. ஆகமங்களில் இவை கூறப்பட்டுள்ளனவா? சொல்லப்போனால் ‘பிராமணர்கள்’ சாஸ்திரப்படி வேதம் ஓத வேண்டும். வேதத்தைப் பயிற்றுவிக்க வேண்டும். சாஸ்திரங்களை மீறி நீதிபதிகளாகவே வந்து உட்கார்ந்து கொண்டு சாஸ்திரம், ஆகமங்களை மீறக்கூடாது என்கிறார்கள்.

தமிழர்கள் அதுவும் பார்ப்பனரல்லாத இந்துக்கள் இந்த இழிவை எத்தனை ஆண்டு காலம் சுமப்பது! இனி ஆகமங்களை தடை செய்! என்ற போராட்டத்தை நாம் தொடங்கியாக வேண்டும்.

கேரள கோயில்களில் பாகுபாடு காட்டும் ஆகமங்களைப் பின்பற்ற வேண்டாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. 1969ஆம் ஆண்டிலிருந்து அங்கே ஆகமங்களைப் புறந்தள்ளி அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக இருக்கிறார்கள்; வடநாட்டுக் கோயில்களில் ஆகமங்கள் பின்பற்றப்படுவதில்லை.

இப்போது மதுரை உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகு அது குறித்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு எந்தக் கருத்தையும் தெரிவிக்காமல் மவுனம் சாதிப்பது ஏன்? அவர் நம்பிக்கையாளராக இருக்கலாம். அதற்காக அரசின் கொள்கையை பலிகடாவாக்கினால் அதை நாம் அனுமதிக்க முடியாது. பெரியாரின் ‘நெஞ்சில் தைத்த முள்ளாக’ இருந்த இந்த இழிவை நீக்குவதற்கு தமிழக முதல்வர் பதவியேற்ற 100 நாட்களுக்குள் செயல்படுத்திக் காட்டிய ‘இந்த சமூக நீதிப் புரட்சித்’ திட்டத்தை அறநிலையத் துறையில் ஊடுருவியுள்ள அதிகாரிகளும் அமைச்சரும் துணை போகக் கூடாது; அது முதல்வருக்கு செய்யும் மாபெரும் துரோகம் என்றார் விடுதலை இராசேந்திரன்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 16.03.2023**

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

# சைமன் ஆணையத்தை இந்தியாவில் வரவேற்றவர்கள் பெரியார், அம்பேத்கர் மட்டுமே!

*பிப்ரவரி 18, 2023 அன்று கோவை மாநகரக் கழகம் நடத்திய "1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை இயக்க மாநாடும், தமிழ் நாட்டு அரசியலும் கருத்தரங்க"த்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை. (சென்ற இதழ்த் தொடர்ச்சி)*



செங்கல்பட்டு சுயமரியாதை மாநாடு எப்படி நடந்தது என்பதற்கு குடிஅரசில் பல செய்திகளைப் பதிவு செய்கிறார் பெரியார். அந்த மாநாட்டில் அன்றைய முதலமைச்சராக இருந்த டாக்டர். சுப்பராயன் கலந்து கொள்கிறார். பிடி.இராசன் கொடியேற்றி உரையாற்றுவார். எம்.கே.ரெட்டி வரவேற்புக் குழு தலைவர், டாக்டர் சுப்பராயன் மாநாட்டை திறந்து வைப்பார். WPA சௌந்தரபாண்டியன் மாநாட்டுத் தலைவர், எம்.கிருஷ்ணன் நாயர் பனகல் அரசரின் திருவுருவப் படத்தை திறந்து வைப்பார். சுரேந்தர்நாத் ஆரியா தொண்டர் படைத் தலைவராக இருப்பார்.

அதைவிட சிறப்பாக மாநாட்டிற்கு ஸ்பெஷல் ட்ரெயின் விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். அதற்குப் பிறகு வருத்தப்பட்டு எழுதுகிறார் இரயில்வே துறையினர் நம்மை ஏமாற்றி விட்டனர். நாம் மாநாட்டு பந்தலுக்கு அருகில் புதிதாக ஒரு இரயில் நிலையத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். தொடக்கத்தில் ஒப்புக் கொண்டவர்கள் மாநாட்டிற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு 3209 ரூபாய் கட்டினால் தான் நாங்கள் அமைக்க முடியும் என்று சொல்கிறார்கள். இதை ஏற்கனவே சொல்லியிருந்தால் பரவாயில்லை, சரி நடப்பது நடக்கட்டும். மொத்தமாக 12 பெட்டிகள் கொண்ட இரயில்கள் புறப்படுகிறது என்றெல்லாம் விளம்பரம் வருகிறது. மாநாட்டிற்கு சிறப்புப் பேருந்து விட்டது எல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த மாநாட்டிற்கு சிறப்பு தொடர் வண்டிகள் விடப்படுகின்றன.

முக்கியமாக இரண்டு, மூன்று தீர்மானங்கள் தான். பெரியார் இதில் அரசியல் விவகாரங்கள் பேசப்படாது என்று சொல்லிவிட்டேன் என்கிறார். இரண்டு அரசியல் விஷயங்களை பேசுகிறார். அப்போது சைமன் கமிஷன் என்ற ஒரு கமிஷன் வருகிறது. எதற்காக வருகிறதென்றால் இதுவரை அரசாங்கத்தின் திட்டங்கள் போய்ச் சேராத மக்களுக்கு கொண்டு போய் சேர்ப்பதற்கு என்ன முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பதை ஆய்வு செய்வதற்காக வருகிறார்கள். இதுவரை இப்படி இந்தியாவில் எந்த அரசியல் கட்சிகளாவது செய்திருக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள். இப்போது தான் திராவிட முன்னேற்ற கழக அரசு திட்டங்கள் நிறைவேறுகிறதா என்று ஆய்வு செய்து வருகிறார் முதல்வர் ஸ்டாலின். சைமன் ஆணையத்துக்குப் பிறகு இந்த ஆட்சியில் தான் கள ஆய்வு செயல்படுத்தப்படுகிறது.

தேர்தல் ஒரு புறம் நடக்கட்டும். திட்டங்கள் நிறைவேறியதா என்று முதலமைச்சர் ஸ்டாலின் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். 1928ஆம் ஆண்டு அந்த சைமன் குழு வருகிறது. பார்ப்பனர்கள் அந்த குழுவை வரவேற்கக் கூடாது என்கிறார்கள். என்ன காரணமென்றால் அந்த குழுவில் ஒரு இந்தியர் கூட இல்லை, எல்லாம் ஆங்கிலேயர்களாகவே வருகிறார்கள். அதனால் வரவேற்கக் கூடாது என்கிறார்கள் பெரியார் எழுதுகிறார் அதற்காகவே அந்த குழுவை வரவேற்பேன் என்று. ஏனென்றால் இந்தியன் என்றால் பார்ப்பானைத் தான் போட்டு இருப்பார்கள், அவன் பார்ப்பனரல்லாதாருக்கு எதிராகத் தான் இருப்பான். ஆங்கிலேயனாவது நடுநிலையாக பார்ப்பான் அதற்காகவே வரவேற்கிறேன் என்றார். இந்தியாவில் வரவேற்றவர்கள் இரண்டே பேர் தான் தென்னிந்தியாவில் பெரியாரும், வட இந்தியாவில் அம்பேத்கரும். நீதிக்கட்சி வரவேற்க மறுக்கிறது. பெரியார் கடுமையாக எதிர்த்து எழுதினார். அதற்குப் பிறகு வரவேற்றனர். அந்த ஆலோசனையின் அடிப்படையில்தான் தீண்டத்தகாத மக்களுக்கு இரட்டை வாக்குரிமை, தனித் தொகுதி என்று வழங்கப்பட்டது.

இரட்டை வாக்குரிமை, தனித் தொகுதி என்ற முறையை சைமன் குழுவினர் பரிந்துரை செய்தனர். உடனே காந்தியார் இரட்டை வாக்குரிமை இந்துக்களை பிரிந்துவிடும் என்று சொன்னார். எல்லா இந்துக்களும் கட்டிப்பிடித்துக் கொண்டு இருப்பது போலவும், இது வந்துதான் பிரித்துவிடுகிறது போலவும் காந்தியார் சொல்லி நாடகம் நடத்தி அதை இல்லாமல் செய்துவிட்டார். மாநாட்டில் சைமன் குழுவை வரவேற்க வேண்டும் மக்கள் ஆங்காங்கு வரவேற்பு கொடுத்து தங்களது கருத்துகளை தெரிவிக்க வேண்டும் என்று செங்கல்பட்டு மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- *செங்கல்பட்டு மாநாட்டுக்கு தனி தொடர்வண்டி விடப்பட்டது. தனி இரயில்வே நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை கடைசி நேரத்தில் இரயில்வே துறையின் முட்டுக்கட்டையால் நின்று போனது.*
- *சைமன் கமிஷன் அறிக்கைக்குப் பிறகு தான், 'தீண்டப்படாத' மக்களுக்கு தனித் தொகுதி, இரட்டை வாக்குரிமை கிடைத்தது. காந்தி அதை உண்ணாவிரத நாடகம் நடத்தி தடுத்து விட்டார்.*

அடுத்தது நேரு கமிட்டி. காங்கிரஸ்காரர்கள் விடுதலை பெறுவதற்கு முன்னரே கமிட்டி ஒன்றை உருவாக்கி அரசியல் சட்டத்தை எழுத ஆரம்பித்து விட்டார்கள். இதற்கு நேரு கமிட்டி என்று பெயர், அதன் தலைவராக மோதிலால் நேரு இருந்தார். விடுதலைக்குப் பின்னால் அரசியலமைப்பு சட்டம் எப்படி இருக்க வேண்டும் என்ற தீர்மானம் காங்கிரஸ் நடத்திய 1929, 1930, 1931 ஆகிய ஆண்டுகளில் நடைப்பெற்ற மாநாடுகளில் வைக்கப்படுகிறது. நேரு கமிட்டி அறிக்கையானது நமது இயக்கத்தின் அடிப்படையான கொள்கைக்கு விரோதமாய் இருப்பதால் அதைக் கண்டிப்பதுடன் இந்தியாவில் வருங்கால அரசியல் திட்ட அமைப்பில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் என்று இந்த மாநாடு வலியுறுத்துகிறது என்று மற்றொரு தீர்மானம்.

முக்கியமான இன்னொரு தீர்மானம் என்னவென்றால் மக்கள் தங்கள் பெயர்களோடு போடும் ஜாதி பட்டங்களை விட்டுவிட வேண்டும். இதில் என்ன சிறப்பு என்றால் 1929ஆம் ஆண்டு மாநாடு நடைபெறுகிறது. பெரியார் 1927ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் தேதி குடிஅரசு இதழில் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் என்பதை மாற்றி ஈ.வெ.ராமசாமி என்று போடத் தொடங்குகிறார். அந்த மாநாட்டின் தலைவராக இருந்த WPA சௌந்தர பாண்டியன் நாடார். மாநாடு முடிந்த பிறகு குடிஅரசு இதழுக்கு கடிதம் எழுதுகிறார். நான் என் பெயருக்கு பின்னால் இருக்கிற நாடார் என்பதை கைவிடுகிறேன் என்னை சௌந்தர பாண்டியன் என்று எழுதுகிறார்.

பின்னர் சிவகங்கை ராமச்சந்திர சேர்வை அவர் சொல்கிறார், இனிமேல் என்னை சிவகங்கை ராமச்சந்திரன் என்று அழைத்தால் போதும். சேர்வை என்ற பின்னொட்டை நீக்கிவிட்டேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி வரிசையாக தங்களது ஜாதிப் பெயரை கைவிட்டோர் பெயர்களைப் பக்கம் பக்கமாக பட்டியலிட்டுக் கொண்டே வருகிறது குடிஅரசு இதழ். அதுதான் தொடக்கம் ஆனால் இப்போது தமிழ் நாட்டில் ஜாதி சங்க தலைவர்களே ஜாதிப் பெயர் இல்லாமல் தான் தங்களுடைய பெயரைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் அப்போது அது பெரிய முயற்சி.

கடவுள் என்ற பெயரால் கோயில்களிலாவது அல்லது வேறு இடங்களிலாவது ஒரு பைசாவாவது ஒரு பைசா பெரும்படியான சாமானமாவது செலவழிக்கக் கூடாது என்றும் வணங்குகிறவனுக்கும் வணங்கப்படுபவனுக்கும் இடையே தரகர்கள் இருக்கக் கூடாது என்றும் இம் மாநாடு கருகிறது. இனிமேல் ஒரு கோயிலும் கட்டக்கூடாது என்றும் இப்போது இருக்கிற கோயில் மடம் வேத பாடசாலை முதலியவைகளுக்காக விடப்பட்டிருக்கிற சொத்துக்களை கைத்தொழில் வியாபாரம் ஆராய்ச்சி கல்வி முதலியவைகளுக்காகவும் கைத்தொழில்களாகவும் செலவு செய்ய வேண்டுமாய் பொது ஜனங்களுக்கு இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது என்பது மற்றொரு தீர்மானம்.

கோயில்களில் உற்சவங்கள் முதலியவை கொண்டாடுவதை நிறுத்திக் கொண்டு அவற்றிற்கு பதிலாக பொதுஜன அறிவு வளர்ச்சி. ஆரோக்கிய வளர்ச்சி. பொருளாதார வளர்ச்சி முதலியவை சம்பந்தமான பொருட்காட்சிகளை நடத்தி மக்களுக்கு அறிவும் செல்வமும் வளர ஏற்படச் செய்ய வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீண்டாதார் எனப்படுவோருக்கு சர்க்காரில் காலியாகும் உத்தியோகங்களில் முதல் உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்றும். மற்ற வகுப்பு சிறுவர் சிறுமியர் அந்தஸ்தை பெரும்வரைக்கும் தீண்டாதார் எனப்படும் சிறுமிகளுக்கு பள்ளிக் கூடங்களில் உணவு உடை உண்டி ஆகியவை இலவசமாய் வழங்கப்பட வேண்டும் என்று இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

பெண்களுக்கு ஆண்களைப் போலவே சொத்துரிமை. பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் வேலைகளில் பெண்களே அதிகமாக நியமிக்கப்படுவதற்கு தக்க ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றும். ஆரம்பக் கல்வியை கற்றுக் கொடுக்கும் உபாத்தியாயர் வேலைகளில் பெண்களையே நியமிக்க வேண்டும் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# உணர்வுகளைப் பகிர்ந்த பெண்கள் சந்திப்பு

அன்னை மணியம்மையார் பிறந்தநாள் மற்றும் மகளிர் தின பெண்கள் சந்திப்பு நிகழ்வு, 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை சென்னை கழகத் தலைமை அலுவலகத்தில் காலை 10.30 மணியளவில் தொங்கி மாலை 5.30 வரை நடைபெற்றது.

நிகழ்விற்கு தேன்மொழி தலைமை ஏற்று நடத்தினார். ஜெயந்தி வரவேற்புரை நிகழ்த்தினார். மதிவதனி அன்னை மணியம்மையார் குறித்து தொடக்கவுரை ஆற்றினார்.

குறளரசி மற்றும் ஆதித்யா ஆகிய இருவரும் திராவிட இயக்கத்தின் பெண் தலைவர்களான அன்னை நாகம்மையார், தோழர் கண்ணம்மாள், அன்னை சத்தியவாணிமுத்து, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், குஞ்சிதம் அம்மையார், டாக்டர் எஸ்.தருமாம்பாள் ஆகியோரது வாழ்க்கைக் குறிப்புகள் குறித்து எடுத்துரைத்தனர். அடுத்த நிகழ்வாக தோழர்கள் பல்வேறு தலைப்புகளில் கருத்துரையாற்றினர்.

woMAN - உடலும், உளவியலும் - தேன்மொழி; பெண்களின் சுயமரியாதையை நிலைநாட்டும் திராவிட மாடல் (அன்றும்-இன்றும்) - ரம்யா; குடும்ப கௌரவத்தின் அடையாளம் பெண்கள் (உருட்டுகளும், புரட்டுகளும்) - அறிவுமதி; சட்டம் பேசாதே! டாக்டர் அம்பேத்கர் பெற்றுத்தந்த பெண்ணிய உரிமைகள் - லீலாவதி; புரட்சிகரப் பெண்ணியத்தின் முன்னோடி தந்தை பெரியார் - ப்ரீத்தி ஆகியோர் உரையாற்றினர். இரண்யா நிறைவுரையாற்றினார்.

நிகழ்வில் கருத்துரையாற்றிய அனைவருக்கும் பெரியாரின் புகைப்படம் நினைவுப் பரிசாக அளிக்கப்பட்டது. மதியம் தோழர்கள் அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்பட்டது. 32 தோழர்கள் பங்கேற்றனர்.

சென்னையில் பணிபுரியும் இராயப்பேட்டை பகுதியில் இருந்து புதிதாக வந்த தோழர்கள் தமிழரசி மற்றும் அபிநயா ஆகியோர் சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

தந்தை பெரியாரின் "பெண் ஏன் அடிமையானாள்" புத்தகத்தை மய்யமாக வைத்து விவாதம் நடத்தப்பட்டது. கலந்து கொண்ட தோழர்கள் அனைவரும் தங்களது கருத்துக்களை உணர்வுப்பூர்வமாக பதிவு செய்தனர்.



பெண்கள் சந்திப்பு நிகழ்வில் புதிதாக கலந்து கொண்ட தோழர்கள் அனைவரும் முழு நாள் நிகழ்வைக் குறித்து மிகவும் நெகிழ்ச்சியுடன் கருத்துக்களை பகிர்ந்தனர். இறுதியாக பாரதி நன்றி கூறினார்.

# சேலம் மாநாடு, தோழர்கள் தீவிரம்

**சேலம் ஆத்தூர் :** திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் "இது தமிழ்நாடு! இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாடு!" ஏப்ரல் மாதம் 29,30 ஆகிய தேதிகளில் சேலத்தில் நடைபெறுகிறது.

மாநாட்டையொட்டி கடைவீதி வசூல் மற்றும் சந்தை வசூல் சேலம் கிழக்கு மாவட்டக் கழக சார்பாக 11.03.2023 சனி மதியம் 12 மணிக்கு ஆத்தூரில் மகேந்திரன் தலைமையில் தொடங்கியது. ஆத்தூர் தந்தை பெரியார் சிலை முன்பு இருந்து தொடங்கபட்ட நன்கொடை திரட்டும் பணி இரவு 9 மணி வரை நடைபெற்றது. ஆத்தூரில் மொத்த நன்கொடை ரூ.8,200 பெறப்பட்டுள்ளது.




கிருஷ்ணன், தங்கதுரை, பிரபாகரன், ஆத்தூர் மகேந்திரன், சிந்தாமனியூர் முருகேசன், ஆனந்தி, வெங்கடேஷ், ஆத்தூர் மணிகண்டன், ஆத்தூர் செங்கமலை ஆகியோர் வசூல் பணிகளை மேற்கொண்டனர்.

## சென்னையிலிருந்து நான்கு பேருந்துகள்

சேலம் மாநாட்டுக்கு சென்னையிலிருந்து 4 பேருந்துகளில் புறப்பட சென்னை மாவட்டக் கழகம் திட்டமிட்டுள்ளது. சென்னை மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம், மார்ச் 13, 2023 மாலை கழகத் தலைமை அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் உமாபதி தலைமையில் கூடியது.

கலந்துரையாடலில், கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், இணையதள பொறுப்பாளர் விஜய்குமார் உள்ளிட்டோர் உட்பட மாவட்ட, பகுதி கழக பொறுப்பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டனர்.

அனைவரும் தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர். மாநாட்டில் சென்னை கழகம் சார்பில் திரளாக பங்கேற்பது, தொடர்ந்து மாநாட்டு செய்திகளை சமூக வலைதளங்களில் பரப்புதல், சுவரெழுத்துக்கள் சென்னை முழுவதும் எழுதுதல், மாநாட்டு விளக்க தெருமுனைக் கூட்டங்கள் என அனைத்தும் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஒவ்வொன்றிற்கும் தனித்தனி குழுக்கள் உருவாக்கப்பட்டு தோழர்கள் வேலைகளை பகிர்ந்து செய்வது எனவும் முடிவெடுக்கப்பட்டது. மாநாட்டுக்கு குறைந்தது நான்கு தனிப் பேருந்துகளில் புறப்படுவது என முடிவு செய்யப்பட்டது.

## சேலத்தில் 50 இடங்களில் சுவரெழுத்து

சேலத்தில் 50க்கும் மேற்பட்ட இடங்களில் சுவரெழுத்துகள் எழுதப்பட்டுள்ளன. கடை வீதி வசூல் ஒவ்வொரு நாளும் நடக்கிறது. தோழர்கள் உற்சாகமாக செயல்படுகிறார்கள்.

**கோவை :** சேலத்தில் ஏப்ரல் 29.30 ஆகிய தேதிகளில் கழகம் நடத்தும் "இது தமிழ்நாடு! இளம் தலைமுறையின் எச்சரிக்கை" மாநாட்டிற்கான துண்டறிக்கை மற்றும் நன்கொடை ரசீது புத்தகங்களை கோவை மாநகரக் கழகத்திற்கு மாநில அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி மாநிலப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் நேரில் வழங்கி மாநாட்டுப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனைகளை கூறினார்கள்.

உடன் மாநகர அமைப்பாளர் நிர்மல் குமார். அய்யப்பன். கிருஷ்ணன். ராஜாமணி ஆகியோர்.

## 100 வயதையும் தாண்டி உற்சாகம்

பெரியார் பெருந்தொண்டர் அய்யா தங்கவேல் (ஆத்தூர்) அவர்களுக்கு 100 வயதாகிறது. நன்கொடைக்காக வந்த கருஞ்சட்டை தோழர்களைக் கண்டதும் அதே உற்சாகத்தோடு தனது கடையில் வெள்ளை சட்டையில் இருந்தவர் நான் பெரியாரின் தொண்டன் உங்களோடு கருப்புச் சட்டையுடன் தான் புகைப்படம் எடுத்துக் கொள்வேன் என கூறியதோடு திவிக நடத்தும் மாநில மாநாட்டிற்கான நன்கொடையையும் வழங்கி ஊக்கப்படுத்தினார்.

## தோழர்களை மாவட்டம்தோறும் நேரில் சந்தித்து மாநாட்டு துண்டறிக்கைகள் வழங்கப்படுகின்றன

மாநில அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, காவலாண்டியூர் ஈசுவரன் இருவரும் மாவட்டம் தோறும் நேரில் சென்று கழகப் பொறுப்பாளர்களிடம் மாநாட்டுக்கான துண்டறிக்கைகளை நேரில் வழங்கி தோழர்களை உற்சாகப்படுத்தி வருகின்றனர்.

## நடிகர் ரஜினிகாந்துக்கு பதில்

ஒரு சொட்டு இரத்தத்தை மனிதரால் உருவாக்க முடியுமா? கடவுள் உடல் கட்டமைப்பை அப்படி உருவாக்கி இருக்கிறான். இதற்குப் பிறகும் சிலர் கடவுள் இல்லை என்று பிதற்றுவது சிரிப்பாக இருக்கிறது. **– ரஜினிகாந்த்**

மனித இரத்தத்தை செயற்கையாக உருவாக்கும் ஆய்வுகள் ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் இங்கிலாந்து விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுவிட்டனர். செயற்கை இரத்தத்தை உருவாக்கி இரண்டு மனிதர்களுக்கு 5 முதல் 10 மில்லி மீட்டர் செலுத்தி வெற்றி பெற்றிருக்கிறார்கள். உலகில் அரிய வகை இரத்தத்தை உருவாக்கும் முயற்சியில் இங்கிலாந்து விஞ்ஞானிகள் வெற்றி பெற்று விட்டார்கள்.

ரஜினி அவர்களே, நவீன அறிவியலுக்கு வாருங்கள்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 17th March 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN